27.7.22

Divisional Engineer (H) Nabard & Rural Roads CHENGALPATTU
27.7.2022

நெடுஞ்சாலைத்துறை

அனுப்புநர்

திரு வீ.இராமச்சந்திரன்,பி.டெக்.,

கோட்டப்பொறியாளர்(நெ)

நபார்டு மற்றும் கிராமச்சாலைகள்

செங்கல்பட்டு

பெறுநர்

மாவட்ட வன அலுவலர்,

செங்கல்பட்டு கோட்டம்,

காஞ்சிபுரம்.

கடித எண். 753 /2021/இநிவஅ1/நாள்- 26.07.2022

அய்யா,

பொருள்- நெடுஞ்சாலைத்துறை-செங்கல்பட்டு மாவட்டம்-நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் கோட்டம், செங்கல்பட்டு-ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை இதர மாவட்டச்சாலையாக தரம் உயர்த்தும் பொருட்டு நெடுஞ்சாலைத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டது-தார்சாலை எந்த வருடம் சீரமைக்கப்பட்டது-பதில் அளித்தல்-தொடர்பாக.

பார்வை-1) மாவட்ட வன அலுவலர், செங்கல்பட்டு கோட்டம்,காஞ்சிபுரம், கடித எண். 330 /2022/வ/நாள்- 23.06.2022.

2) இவ்வலுவலக கடித எண். 753 /2021/ இவஅ.1/நாள்-30.6.2022, இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செங்கல்பட்டு மாவட்டம், அவர்களுக்கு முகவரியிடப்பட்டது.

3) இணை இயக்குநர்/ திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செங்கல்பட்டு ந.க.எண். 3003 /2022/அ9/நாள்- 20.07.2022.

----0000--

பார்வை-1 ல் காணும் கடிதத்தில் மாவட்ட வன அலுவலர், செங்கல்பட்டு கோட்டம், காஞ்சிபுரம் அவர்கள் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துதல் பணிக்கு கீழ்கண்டுள்ள சாலை பணி எந்த வருடம் சீரமைக்கப்பட்டுள்ளது என்பதை கோரப்பட்டுள்ளது.

| வ. எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | சாலையின் விவரம் | வனத்துறையின் பராமரிப்பில் உள்ள சாலையில் நீளம். |
|---|---|---|---|
| 1. | காட்டாங் கொளத்தூர் | GST சாலை முதல் வடகால் (வழி) செட்டிபுண்ணியம் கிமீ.0/0-2/0 | கிமீ. 1/314-2/0 |

மேற்காணும் சாலை தொடர்பாக பார்வை-2ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின் மூலம் இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செங்கல்பட்டு மாவட்டம் அவர்களை கேட்டுகொள்ளப்பட்டது.

மேற்காணும் சாலையில் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட சீரமைத்தல் பணிக்கான வனத்துறையின் தடையின்மை சான்று பெற்றமைக்கான ஆவணங்கள் ஏதும் அந்த அலுவலக கோப்புகளில் கிடைக்கப்பெறவில்லை என இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,செங்கல்பட்டு மாவட்டம் அவர்கள் பார்வை-3ல் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளார் (அதன் நகல் இணைக்கப்பட்டுள்ளது) என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இணைப்பு- பார்வை-3ல் காணும் கடிதத்தின் நகல்.

26.7.22

கோட்டப்பொறியாளர்(நெ) F/c
நபார்டு மற்றும் கிராமச்சாலைகள்
செங்கல்பட்டு

26/7/22

நகல்-

1) கண்காணிப்புப்பொறியாளர்(நெ)நபார்டு(ம)கிராமச்சாலைகள்,செங்கல்பட்டு அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2) உதவிக்கோட்டப்பொறியாளர்(நெ)நபார்டு (ம)கிராமச்சாலைகள், செங்கல்பட்டு தொடர் நடவடிக்கைக்காக.

3) உதவிப்பொறியாளர்(நெ)நபார்டு (ம)கிராமச்சாலைகள், செங்கல்பட்டு பிரிவு-1 தொடர் நடவடிக்கைக்காக.

de to dfo kpm tamil 26072022